மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.13/2023</u>

2026 ம் ஆண்டு பிப்ரவரி 04 ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>04.02.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. க.ச.எண். 582 என்பது பைமாஸ் இட்டேரியா என்றால் ஆமாம். அந்த இட்டேரியானது நத்தக்காட்டு வலசு முதல் காங்கேயம்பாளையம் வரை செல்லும் தென்வடல் இட்டேரி என்றால் சரிதான். அந்த தென்வடல் இட்டேரியை ஒட்டியே எனக்கு க.ச.எண்.579 ல் எனக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல சொத்துக்கள் உள்ளது. அந்த பைமாஸ் இட்டேரியில் இருந்து தான் மேற்கு நோக்கி 10 அடி அகல கிழமேல் தடம் உள்ளதாக நான் வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

2. தாவா 3 வது அயிட்ட சொத்தான கிழமேல் இட்டேரியை ஒட்டியே தென்புறத்தில் எனக்கு க.ச.எண்.579 ல் பூமிகள் உள்ளது என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் 5 ஏக்கர் 7–1/2 சென்ட் என்றால் சரிதான். மேற்படி க.ச.எண்.579 காலையில் எங்கள் பூமிக்கு நடுவில்

தெற்கு நோக்கி ஒரு வண்டி தடம் செல்கிறது என்றால் ஆமாம். க.ச.எண்.579ல் எனது பூமிக்கு தென்புறத்தில் க.ச.எண். 579ல் பிரதிவாதிகள் பூமி உள்ளது என்றால் சரிதான். க.ச.எண். 579 பூமியின் மத்தியில் உள்ள தென்வடல் வண்டித்தடத்தின் வழியாகத்தான் பிரதிவாதி அவரது பூமிக்கு சென்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் ஆமாம்.

3. க.ச.எண். 579ல் உள்ள எனது பூமிகள் மற்றும் பிரதிவாதிகள் பூமிகளுக்கு மேல்புறத்தில் க.ச.எண்.573 பூமிகள் உள்ளது என்றால் ஆமாம். அந்த பூமியை சிறிது நாட்களுக்கு முன்பு பிரதிவாதி கிரயம் வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். க.ச.எண்.572 பூமியானது கிழமேல் வண்டி பாதைக்கு வடபுறத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.572 பூமியின் மொத்த விஸ்தீரணம் 10 ஏக்கர் ஒரு சென்ட் என்றால் சரிதான். அந்த 10 ஏக்கர் ஒரு சென்ட் பூமியில் மேல்புற பாகம் சுப்புராய கவுண்டர் வகையறாவினரான எங்களுக்கும் கிழபுற பாகம் சின்னப்ப கவுண்டர் என்கிற சின்னா கவுண்டரின் வாரிசுகளான பிரதிவாதிகள் வகையறாவினருக்கும் பாத்தியம் என்றால் சரிதான்.

4. க.ச.எண்.579ன் மேற்கு எல்லையானது கிழமேல் தடத்திற்கு வடபுறம் உள்ள க.ச.எண்.572 காலையில் பழனியம்மாள் பாகத்துடன் முடிவடைந்து விடுகிறது என்றால் இல்லை பிரதிவாதி பாகத்தோடு முடிவடைந்து விடுகிறது. க.ச.எண்.572 பூமியானது பல உட்பிரிவுகளாக பிரிவினை செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சின்னப்ப கவுண்டர் என்கிற சின்னா கவுண்டரின் வாரிசுகளான பழனிச்சாமி கவுண்டர், கருப்பண கவுண்டர் மற்றும் நாச்சப்ப கவுண்டர் மகன் சுப்புராயன் ஆகியோர்கள் 02.03.1959 தேதியில் பாகம் செய்து கொண்டார்கள்

என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் பிரதிவாதியின் தாத்தா பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கு பாகம் பிரிந்த ஏ அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. க.ச.எண். 572 பூமியின் வடக்கு பக்கத்தில் க.ச.எண். 571 பி உள்ளது என்றால் சரிதான். 02.03.1959 தேதிய பாகப்பிரிவினையில் க.ச. 572 மாமூல் கிழமேல் தடத்திலிருந்து ஏ செட்யூல் பாகத்தில் மேற்புறம் நேர் வடக்கே க.ச.571 பி காலை வரை 13 அகலத்தில் தடம் போட்டு நாம் யாவரும் கால்நடைகளுடன் நடந்து கொள்ள வேண்டியது என்று சரத்துக்கள் கண்டுள்ளது என்றால் சரிதான். 05.06.1919 ம் தேதியில் சுப்பராய கவுண்டரின் மகன்களான பழனிச்சாமி கவுண்டர், நாச்சிமுத்து கவுண்டர் பிரதிவாதிகளின் பாட்டனரான சின்ன கவுண்டர் என்கிற சின்னா கவுண்டர் என்பவருடன் சேர்ந்து பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். அதில் 1 வது அயிட்ட சொத்துக்கள் எனது தாத்தாவான பழனிச்சாமி கவுண்டர் மற்றும் நாச்சிமுத்து கவுண்டர் ஆகியோர்களுக்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 1 வது ஜாபிதா சொத்து விபரத்தில் தடம் எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கண்டு எழுதி உள்ளார்கள் என்றால் சரிதான்.

6. மேற்படி பாகப்பிரிவினையில் க.ச.572 மற்றும் க.ச.579 ஆகிய காலைகளை பொறுத்து மட்டும்தான் பாகம் செய்து கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் 1 வது ஜாபிதா சொத்து விபரத்தில் க.ச.572 மற்றும் க.ச.579 காலைகள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் 579 நெ. காலைக்கு இரண்டு இலக்கமிட்டவரின் பாக

பூமியில் தெற்கு வேலி ஓரமாய் வண்டி வகையறாக்களுடன் போக இட்டேரி போட்டுக் கொள்ள வேண்டியது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1919 பாகப்பிரிவினை ஆவணத்தை நான் வா.சா.ஆ.1 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.1 ஆவணத்தில் க.ச.572 காலைக்கு தட பாத்தியம் எதுவும் கண்டு எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சின்னா கவுண்டருக்கு பிரிந்த சொத்திற்கு செல்ல 579 காலையின் 1வது பாக பூமிக்கு வடக்கு வேலி ஓரமாக மேற்கே வண்டி வாகனம் செல்ல தடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.579 காலைக்கு எதிரிலேயே பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட க.ச.572 காலை அமைந்துள்ளது என்றால் ஆமாம். க.ச.572 காலைக்கு செல்ல பிரதிவாதிக்கு தடம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றும் எங்கள் பூமியான க.ச.572 காலைக்கு தட பாத்தியம் எதுவும் கண்டு எழுதப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

8. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 பழனிசாமி கவுண்டர் மற்றும் நாச்சிமுத்து கவுண்டர் ஆகியோர் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் என்றால் சரிதான். அதில் சின்ன கவுண்டர் என்கிற சின்னா கவுண்டரோ அவர்களது வாரிசுகளோ தரப்பினர்களாக இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.1 ஆவணமான பாகப்பிரிவினை ஆவணத்தை அடிப்படையாக வைத்து ஏற்படுத்திக் கொண்ட கொண்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்திலேயே எங்களது க.ச.572 காலை பூமிக்கு தட பாத்தியம் கண்டு எழுதப்படாத நிலையில் வா.சா.ஆ.3 ஆவணத்தில் க.ச.572 காலைக்கு தட பாத்தியம் கண்டு மேற்படி ஆவணத்தை

ஏற்படுத்திக்கொள்ள எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

9. 02.03.1959 தேதியில் சின்னா கவுண்டர் என்பவரின் வாரிசுகள் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் ஆமாம். அதில் பிரதிவாதியின் பாட்டனாருக்கு கிழக்கோட்டு பங்கை ஒதுக்கினார்கள் என்றால் ஆமாம். அது தற்போது ரீசர்வே எண். 572/4 ஆக உள்ளது என்றால் ஆமாம். அதன் மேல்புறத்தில் நாச்சிமுத்து கவுண்டர் மகன் சுப்பராயன் என்பவருக்கு பாகம் ஒதுக்கினார்களா என்றால் ஆமாம். அது ரீசர்வே எண்.572/5 ஆக உள்ளது என்றால் ஆமாம். சுப்புராயன் பங்கிற்கு மேல்புறத்தில் கருப்பண கவுண்டருக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். கருப்பண கவுண்டர் தனது பாகத்தை பிரதிவாதியின் தாத்தா பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கே விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். அது ரீசர்வே எண்.572/6 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரீ.ச.எண்.572 பூமியில் உள்ள தடமும் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 579 காலைக்கு மேல்புறத்தில் உள்ள கிழமேல் தடமானது க.ச.572 காலைக்குள் செல்கிறது என்றால் ஆமாம்.

10. அந்த தடம் பிரதிவாதி பூமியின் தெற்குவேலி ஓரமாக செல்கிறது என்றால் ஆமாம். க.ச.எண். 572/6 பூமிக்கு மேல் புறத்தில் வடக்கு நோக்கி தென்வடலாக இட்டேரி செல்கிறது என்றால் ஆமாம். க.ச.572 மற்றும் க.ச.571பி காலைக்கு வடபுறத்தில் தார்ரோடு செல்கிறது என்றால் ஆமாம். அந்த இட்டேரி சென்று தார் சாலையோடு இணைகிறது என்றால் இல்லை. நாங்கள் நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையரை அழைத்துச் சென்று தாவா சொத்துக்களை

காண்பித்த போது தென்வடல் இட்டேரியை காட்டவில்லை என்றால் சரிதான்.

11. கிழமேல் தார் சாலையில் இருந்து வரும் தென்வடல் இட்டேரி தான் எங்களது க.ச. 572 காலைக்கு தடம் என்றும் பிரதிவாதிகள் பூமியில் தெற்குவேலி ஓரமாக அமைக்கப்பட்டுள்ள தடத்தில் நாங்கள் க.ச. 579 காலைக்கு மட்டுமே செல்ல முடியும் என்றும் க.ச.572 காலைக்கு செல்ல இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. க.ச.572 மற்றும் க.ச.573 ஆகிய காலைகள் அருகருகே ஒட்டி உள்ளது என்றால் ஆமாம். பிரதிவாதிக்கு மேற்படி பூமிகள் பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். க.ச.572 பூமியில் தெற்குவேலி ஓரமாக தடத்தில் சென்றால்தான் பழனியம்மாள் என்பவர் பூமிக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். க.ச.572 பூமியில் தெற்குவேலி ஓரமாக போடப்பட்ட தடமானது சின்னா கவுண்டர் வகையறாவினர் அவர்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட தடம் என்றும் அந்த தடத்தில் எங்களுக்கு பாத்தியம் எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

12. க.ச.572 காலையில் தெற்கு வேலி ஓரமாக உள்ள கிழமேல் இட்டேரியில் எங்களுக்கு எந்த பாத்தியமும் உரிமையும் இல்லாத நிலையில் க.ச.572 காலையிலிருந்து க.ச.573 காலைக்கு பிரதிவாதிகள் செல்லக்கூடாது என நாங்கள் பரிகாரம் எதுவும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. தாவா 3 வது அயிட்ட சொத்தில் நாங்கள் க.ச.579 காலைக்கு மட்டும் தான் செல்ல முடியும் என்றும் க.ச.572 காலைக்கு நாங்கள் செல்ல இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. எனவே இந்த வழக்கில் நாங்கள் கோரியுள்ள பரிகாரங்கள்

எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும் இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.04 18:12:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்